DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, DENKANIKOTTAI
PROSECUTION WITNESS

SC. No. 71/2023 Crime No. 523/2020 Station Thally PS

| | | | |
|---|---|---|---|
| Name | Lw24 /Pw 9 / Nagaraj/ Inspector of Police | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | |

**26.03.2026.**

**1, 2 எதிரிகள் ஆஜர் .**

**அ.சா.9 முதல் விசாரணை**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம் பரமத்தி வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பாக கடந்த 2021 ம் வருடம் கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை உட்கோட்டம், தேன்கனிகோட்டை வட்ட காவல் ஆய்வளாரக பணிபுரிந்து வந்தேன். எனக்கு முன்பாக பணிபுரிந்த காவல் ஆய்வாளர் அவர்கள் தளி காவல் நிலைய குற்ற எண்.523/2020 சட்டபிரிவுகள் 307 இ.த.ச.மற்றும் 27(1) Indian Arms Act ன் படி வழக்கு பதிவு செய்து சம்பவ இடம் சென்று சாட்சிகளின் முன்னிலையில் சம்மபவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தும், பிறகு வழக்கில் காயம் பட்ட சாட்சி மற்றும் இதர சாட்சிகளை விசாரணை செய்தும் வழக்கின் A1 எதிரி முருகேஷ் என்பவரை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றும், அதன் அடிப்படையில் வழக்கு சொத்துக்களை கைப்பற்றியும் பிறகு வழக்குச்சொத்துக்களை தடயஅறிவியல் ஆய்வகம் சென்னைக்கு அனுப்பி வைத்தும், அன்றைய தினமே சம்பவ இடத்தில் இருந்து சேகரம் செய்த வழக்கு சொத்துக்களை தடயஅறிவியல் ஆய்வகம் சென்னைக்கு அனுப்பிவைத்து அறிக்கை பெறப்பட்டது. சென்னை தடயஅறிவியல் ஆய்வகத்தில் தடய அறிவியல் ஆய்வகத்தில் இருந்து பெறப்பட்ட Biological Report **அ.த.சா.ஆ.22** ஆகும். சென்னை தடய ஆய்வகத்தில் இருந்து பெறப்பட்ட Balastic Report **அ.த.சா.ஆ.23** ஆகும். பிறகு ADPகிருஷ்ணகிரி அவர்களின் கருத்துரையை பெற்று வைத்திருந்த வழக்கு கோப்பை நான்

விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்றும் சாட்சிகளை விசாரணை செய்ததில் முதல் விசாரணை செய்த காவல் ஆய்வாளர் அவர்களிடம் சொன்னது போலவே என்னிடம் கூறியதால் அவர்களுக்கு நான் தனியாக வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை. பிறகு முதல் விசாரணை செய்த காவல் ஆய்வாளர் அவர்களின் விசாரணையில் இருந்தும், ADP அவர்களின் கருத்துரையை பரிசீலனை செய்ததில் இருந்தும் இவ்வழக்கில் காயம் பட்ட ருத்திரப்பா என்பவர் வழக்கில் 2 வது எதிரியாக தெரியவந்தது. எனவே, ருத்ரப்பவை 11.01.2022 ம் தேதி காலை 10.30 மணி சுமாருக்கு தளி BDO அலுவலகம் அருகில் மேற்கண்ட ருத்ரப்பாவை சாட்சிகள் திரு.முஜிப்கான் மற்றும் திரு.ஜிலானி ஆகியோர்கள் முன்னிலையில் கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று பிறகு கைது செய்த விவரத்தை ருத்ரப்பாவின் உறவினர்களுக்கு தெரிவித்தேன். எதிரி ருத்ரப்பாவை நீதிமன்ற காலுக்கு உட்படுத்தினேன். எதிரி ருத்ரப்பா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் **அ.த.சா.ஆ.24** ஆகும். பின்பு இவ்வழக்கில் இராசயன பகுப்பாய்வு அறிக்கை சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில் இருந்து பெற்று அதன் அடிப்படையில் ADP அவர்களிடம் மறு கருத்துரை பெற்றேன். அந்த கருத்துரை **அ.த.சாஆ.25** அகும். இவ்வழக்கில் கண்ட எதிரிகள் முருகேஷ் மற்றும் ருத்ரப்பா இருவர் மீதும் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் Prosecution Order பெற்று பிறகு நடந்த விசாரணைகளை வைத்து சாட்சிகள் திரு.முஜிப்கான், திரு.ஜிலானி மற்றும் முதல் நிலை காவலர் திரு. தாமஸ் அவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். அந்த Prosecution Order **அ.த.சா.ஆ.26** ஆகும். பிறகு 16.04.2022 ம் தேதி இவ்வழக்கின் சட்டபிரிவுகள் 307 இ.த.ச. மற்றும் 27(1) Indian Arms Act ல் இருந்து சட்டபிரிவுகள் 308, 201 இ.த.ச மற்றும் 25(1-B) (a),25 (1-A) Indian Arms Act ன் படி மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். அந்த சட்டபிரிவு மாறுதல் அறிக்கை **அ.த.சா.ஆ.27** ஆகும். பிறகு இவ்வழக்கில் கண்ட முதல் எதிரி முருகேஷ் மீது சட்டபிரிவுகள் 308, 201 இ.த.ச மற்றும் 25(1-B) (a),25 (1-A) Arms Act ன் படியும் 2வது எதிரி ருத்ரப்பா என்பவர் மீது சட்டபிரிவு 25(1-B) (a),25 (1-A) Arms Act ன் படி இருவர் மீதும் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்**

2வது எதிரி ருத்ரப்பா கொடுத்தாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் BDO அலுவகத்தில் முன்பு பெறப்பட்டதாக சொல்லபடுவதில் சாட்சிகள் ஜிலாணி மற்றும் முஜிப் கானை தவிர வேறு தனிப்பட்ட சாட்சிகள் யாரையாவது விசாரித்தேனா என்றால் தனிப்பட்ட சாட்சிகள் யாரும் முன்வரவில்லை. அதனால் தனிப்பட்ட சாட்சிகள் விசாரிக்கவில்லை. எதிரி ருத்ரப்பா கையெழுத்து தான் போடுவார் என்றும் அவர் கைரேகை வைக்கமாட்டார் என்றால் நான் விசாரணை செய்தபோது அவர் கைரேகை தான் வைத்தார். 2ம் எதிரி ருத்ரப்பா கொடுத்த புகாரின் அடிப்படையில் தான் SI சிவராஜ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் என்றால் சரிதான். இந்த வழக்கை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட பிறகு SI சிவராஜை நான் விசாரிக்கவில்லை என்றால் எனக்கு முன்னால் இருந்த புலன் விசாரணை அதிகாரி SI சிவராஜை விசாரித்து வைத்திருந்தார். அவரிடம் சொன்னதையே என்னிடமும் சொன்னதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை. தற்போது நான் சொல்லும் விவரங்களை நான் எனது முதல் விசராணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்றும் சரியாக புலன் விசாரணை செய்திருந்தால் 2ம் எதிரி ருத்ரப்பாவை கைது செய்திருக்கமாட்டேன் என்றும் நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது பொய்யாக இறுதி குற்ற அறிக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஒம்./- எஸ்.விஜய் அழகிரி,, பி.காம்.,பி.எல்.,

சார்பு நீதிபதி,

தேன்கனிக்கோட்டை.